<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 69/2021 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | கண்ணையன் | நாள் | 29.10.2024 |
| தகப்பனார் பெயர் | வெங்கிடு | | |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:–</u>**

1) பிரதிவாதிகளின் வீடும், என் வீடும் அடுத்தடுத்து உள்ளது என்றால், சரிதான். என் சொத்து விவரத்தில் உள்ள சக்குபந்தி விவரங்களிலேயே 1ம் பிரதிவாதியின் பெயர் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். தாவா சொத்து விவரத்தில் ஆ–அயிட்ட சொத்தில் 3/4 சென்ட் நிலம் எனக்கும், பிரதிவாதிகளுக்கும் பொது பாத்தியம் என சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், 1ம் பிரதிவாதி என் தாயாருக்கு கிரயம் கொடுத்த சொத்திலுள்ள தடவழியை நான் பயன்படுத்த கூடாது என கூறி பிரதிவாதிகள் தடுத்ததால், தடுக்க கூடாது என இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன்.

2) என் வீடு வடக்கு பார்த்து உள்ளது. என் வீட்டிற்கு மேற்குபுறம் பிரதிவாதிகள் வீடு உள்ளது. இரு வீட்டிற்கும் நடுவில் அதாவது என் வீட்டிற்கு மேற்குபுறம் கிழமேலாக ஒரு சுவர் உள்ளது என்றால், இல்லை. 2015ம் வருடத்தில் வீரக்கல் புதூர் பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் சுப்ரமணி, குணசேகரன், பாரதி ஆகியோர் முன்னிலையில் பஞ்சாயத்து பேசப்பட்டு, மேற்படி பிரச்சனைக்குரிய 3/4 சென்ட் நிலத்தில் 2 அடி பிரதிவாதிகள் விட்டனர் என்றாலும், அதில் நான் கிழமேல் சுவர் எழுப்பியுள்ளேன் என்றாலும், சரியல்ல.

3) அவ்வாறு இருவருக்குமிடையே 3/4 சென்ட் தான் பிரச்சனை என்ற நிலையில், இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையரை நியமித்து, மேற்படி பிரச்சனைக்குரிய சொத்தை பார்வையிட்டு, அதன் பௌதீக தன்மைகள் தொடர்பாக அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நான் நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளேனா என்றால், இல்லை.

மேற்படி 3/4 சென்ட் நிலத்தில் இருவருக்கும் பொது பாத்தியம் உள்ளதாக நான் சொல்லும் நிலையில், மேற்படி 3/4 சென்ட் நிலத்தில் எனக்குள்ள பொது பாத்திய உரிமையை விளம்புகை செய்யகோரி நான் விளம்புகை பரிகாரம் ஏதேனும் கேட்டுள்ளேனா என்றால், என்னிடம் கிரய பத்திரம் உள்ளதால் நான் கேட்கவில்லை.

4) 1ம் பிரதிவாதியிடமிருந்து என் தாயார் சொத்தை கிரயம் பெற்றதன் அடிப்படையில்தான் மேற்படி 3/4 சென்ட் நிலத்தில் எங்களுக்கு பொதுபாத்தியதை வருகிறது என்றால், இல்லை. அதற்கு முன்பே 1971ம் வருடத்தில் பழனியம்மாளிடமிருந்து என் தாயார் தற்போது நான் குடியிருக்கும் சொத்தை கிரயம் பெற்றதிலிருந்தே மேற்படி 3/4 சென்ட் நிலத்தில் எங்களுக்கு பொது பாத்தியம் உள்ளது.

(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.